(Chapter XXIII Code of Criminal Procedure)

----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

| | | |
|---|---|---|
| Calender | .. .. | Case No. CC. 116 of 2022 |
| Miscellaneous | .. .. | |
| Preliminary Register | .. .. | |
| Sessions | .. .. | |
| | | Prosecution/Complainant side **P.W.3** |
| Deposition of witness for | | Defence |
| | | Court |

Name : சேகர்

Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of November 2022.

25.11.2022

**சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். இவ்வழக்கின் எதிரியை தெரியும். எதிரி மனுவின் பேரில் ஆஜர் இல்லை. அவர் எனது ஊர்க்காரர். எனக்கு சம்பவத்தை பற்றி

எதுவும் தெரியாது. ஒரே ஊர்க்காரர்கள் என்பதால் போலிசார் என்னை சாட்சியாக சேர்த்துள்ளார்கள். வழக்கை பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி அரசு தரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்ததால் அவரை பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வேண்டியதன் பெயரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்யபடுகிறார். )

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** கடந்த 12.08.2021ம் தேதி 06.45 மணியளவில் நான் எங்கள் ஊர் முனியசாமி கோவில் அருகே குளிப்பதற்கு சென்று கொண்டிருந்தபோது அசா.1 செல்வராணி, அசா.2 தேவி, ராஜேஸ்வரி ஆகிய மூவரும் கையில் ரீப்பர் கம்புடன் நின்றுகொண்டிருந்த எதிரியை பார்த்து அலறி சத்தம் போட்டார்கள் என்று சொன்னால் சரியல்ல.

**2)** நான் ஓடிச்சென்று பார்த்த போது லட்சுமணன் இடதுபக்க தலை, வலது கால் கரண்டை, இடதுகால் கரண்டை, இடது மணிக்கட்டில் இரத்தக் காயத்துடன் விழுந்து கிடந்தார் என்று சொன்னால் சரியல்ல. நான் சண்டையை விலக்கிவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் எதிரி, லட்சுமணனை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலைமிரட்டல் விடுத்தார் என்று சொன்னால் சரியல்ல. எதிரி எனது ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

| | | |
|---|---|---|
| Calender | .. .. | Case No. CC. 116 of 2022 |
| Miscellaneous | .. .. | |
| Preliminary Register | .. .. | |
| Sessions | .. .. | |
| | | Prosecution/Complainant side **P.W.4** |
| Deposition of witness for | | Defence |
| | | Court |

| | | |
|---|---|---|
| Name | : | லட்சுமணன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 25th day of November 2022.

25.11.2022

**சாட்சி ஆஜர். சாட்சி அசல் ஆதார் அடையாள அட்டையை சரிபார்த்தும் இவர் தான் சாட்சி சொல்லும் நபர் என்று நீதிமன்றம் போலிசார் சாட்சியை அடையாளம் செய்து உறுதி செய்த பின்பு சாட்சியம் அளிக்கிறார். (ஆதார் அடையாள அட்டை நகல் பெறப்பட்டது).**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். இவ்வழக்கின் எதிரியை தெரியும். எதிரி மனுவின் பேரில் ஆஜர் இல்லை. அவர் எனது உறவினர். கடந்த 12.08.2021ம் தேதி

காலை இளஞ்செம்பூர் காவல்நிலையத்தில் எதிரி செல்வம் மீது புகார் அளித்திருந்தேன் அன்று மாலை 6.45 மணியளவில் குளித்துவிட்டு முனியசாமி கோவிலில் சாமி கும்பிட்டு கொண்டிருந்தேன்.

**2)** அப்போது இவ்வழக்கின் எதிரி செல்வம் இடத்தை திருப்பிகொடுடா என்று கூறி கையில் வைத்திருந்த ரீப்பர் கம்பால் தலையில் அடித்தார், பின்பு இடது கையில் அடித்தார். நான் கீழே விழுந்தவுடன் எனது காலில் மாறிமாறி அடித்தார். இதனால் தலையிலிருந்து இரத்தம் வடிந்தது. இடது கை ஒடிந்துவிட்டது.

**3)** பின்பு, 108 ஆம்புலன்சில் முதுகுளத்தூர் அரசு மருத்துவமனைக்கு எனது மகள்கள் செல்வராணியும், ராஜேஸ்வரியும் சேர்த்தார்கள். பின்பு மேல்சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டார்கள். நான்மயக்கநிலையில் இருந்ததால் எனது மகள் சம்பவம் குறித்து புகார் கொடுத்துள்ளார். போலிசார் என்னை விசாரித்தாகள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி ஆஜர் இல்லை. கற்றறிந்த வழக்கறிஞர் தற்போது குறுக்கு விசாரணை இல்லை என்பதன்பேரில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.